நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தவகையில்தான் மற்ற மற்ற கோட்டை கொத்தளங்களையும் ஆராய்ந்து என்ன என்ன இடத்தில் எப்படிப்பட்ட பணிகளைச் செய்ய முடியும், பழம்பெரும் வரலாற்றை நினைவுகொள்வதற்கு என்பதுதான் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

(முற்பகல் 9-30)

Rural Electrification Projects

* 239 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether any loans have been obtained from the Rural Electrification Corporation, during January 1974 for the execution of three additional rural electrification projects in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) கிராம மின் வசதிக் கழகம், 1974 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் கீழ்க்கண்ட மூன்று திட்டங்களுக்கு ரூ. 57.65 லட்சம் கடனுதவி வழங்கியுள்ளது. முதல் தவணைக்கடனும் கொடுக்கப் பட்டுவிட்டது—

(1) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வளர்ச்சி வட்டாரத்திட்டம் (ஒருங்கிணைந்தத் திட்டம்); இத் திட்டம், மின்சாரத்தை மேலும் விரிவு படுத்தும் நோக்கமுடையதாகும்.

(2) தற்போதைய மின் வழங்கல் நிலைமைகளை நிலைப் படுத்துவதற்கான வேப்பூர்-பெண்ணாடம் மின்சக்தி மேம்பாட்டுத் திட்டம்.

(3) தற்போதைய மின் வழங்கல் நிலைமைகளை நிலைப் படுத்தும் நோக்குடன் அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டம் சுல்தான்பேட்டை மின்சக்தி மேம்பாட்டுத்திட்டம்.

[1975 மார்ச் 8

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, 1974-75-ம் ஆண்டு 30 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் தரப்போவதாகவும், 1975-76-ல் 60 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் தரப் போவதாகவும் சொன்னார்கள். 1974-75 முடியப் போகிறது. எத்தனை ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்கப் பட்டது? பல இடங்களில் கனெக்ஷன் கேட்டால், கம்பி இல்லை என்றும், மீட்டர் போர்டு இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இதைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இப் போது சர்வீசுக்கு அதிக டிப்பாசிட் கட்ட வேண்டும் என்று நோட்டீஸ் வருகிறது. 10 நாட்களுக்குள் கட்டவில்லை என்றால் சர்வீசைத் துண்டித்து விடுவதாகக் கூறுகிறார்கள். அமைச்சர் அது பற்றிச் சொல்லலாம். ஆனால், அங்குள்ளவர்களுக்கு உத்திரவு போயிற்று என்று தெரியவில்லை. ஆகவே, உடனடியாக டெபாசிட் கட்ட வேண்டும் என்ற உத்தரவை ரத்து செய்வதற்கு அரசு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர் களே, கொடுக்கப்பட்ட மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வியாக இருக்கிறது. தற்போது அது பிரச்சினையாக இருப் பதால் அதைப் பற்றி பதில் சொல்கிறேன். முதலாவதாக இந்த ஆண்டு 30 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குச் சர்வீஸ் கனெக்ஷன் கொடுப்பதாகவும், அடுத்த ஆண்டு 60 ஆயிரம் பம்பு செட்டு களுக்குச் சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கப் போவதாகவும் திட்டம். சொல்லியது போல் பம்பு செட்டுகளுக்கு சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்க முயற்சி எடுக்கிறபோது அலுமினியம் கம்பி போதவில்லை. மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம். விவசாயத் துறை மூல மாகவும் வற்புறுத்தியிருக்கிறோம். முடிவான பதில் வரவில்லை. மாநில அளவில் இருக்கக்கூடியதை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

அடுத்து, எதிர்பார்ப்பது போல அதிகமான கிணறுகளுக்குப் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகமாக டிப்பாசிட்டுப் பணம் கட்ட வேண்டும் என்றும், உடனடியாகக் கட்ட வேண்டும் என்றும், இல்லையென்றால் டிஸ் கனெக்ஷன் செய்யப்படும் என்றும் மின் உபயோகிப்பவர்களுக்கு நோட்டீஸ் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அது போல் சப்ளை துண்டிக்கப்படக்கூடாது என்று 28-ம் தேதியன்று முதலமைச்ச ரோடு கலந்து ஒரு உத்தரவு அன்றே போடப்பட்டிருக்கிறது.

1975 மார்ச் 8]

அது 3-ம் தேதிக்குள் எல்லா எஸ்.ஈ. க்களுக்கும் போய்ச் சேர்ந்து விட்டது என்பதை நானே பார்த்துவிட்டேன். அங்கத்தினர்கள் கூறிய இந்த யோசனையால் மின்சார வாரியத்திற்கு வர வேண்டிய 7 கோடி ரூபாய் வருமானம் ஒன்னே முக்கால் கோடியாகக் குறைந்து போய் விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

திரு. கே. ரங்கநாதன் : *இந்தத் திட்டங்கள் எப்போது முடி வடையும் என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : *இதற்கான முதல் தவணை இப்போது தான் வந்திருக்கிறது. இந்த அடிப்படையில் இந்தத் திட்டம் முடிவடைவதற்கு 2, 3 ஆண்டுகள் ஆகும்.*

Graphite deposits

°240 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether any experiment has been conducted by the Government in recent times to convert graphite into diamond; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : *(அ) இல்லை.*

(இ) வினாவிற்கு இடமில்லை.

Export of Aluminium cables

°241 *Q.*—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether a large quantity of Aluminium cables have been airlifted from the Aluminium Industries in this State in February-March 1974; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : *(அ) இம் மாநிலத் திலிருந்து அலுமினிய கம்பிச் சுருள்களை விமானங்களில் ஏற்றிச் சென்றதுபற்றி அரசிடம் தகவல் எதுவுமில்லை.*

(இ) கேள்விக்கு இடமில்லை.